DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 250/2023 |
| Police Station | Manamadurai P.S |
| Deposition of Witness for | LW.4 /PW.4 |
| Name | தங்கச்சாமி |
| Father's/Husband's Name | அய்யாக்கண்ணு |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**Accused absent. 317 Crpc Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07.08.2025 at **12**.15 p.m

**முதல் விசாரணை:**

நான் மானாமதுரை வேளார் தெருவில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக செங்கல் சூலை வைத்து நடத்தி வருகிறேன். நான் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு நான் மானாமதுரை பைபாசில் உள்ள செங்கல் சூலையில் வேலை பார்த்து கொண்டிருந்த போது டமார் என்று சத்தம் கேட்டது. நான் ஓடி சென்று பார்த்த போது தலையாரி இருந்தார் சேர்மன் வந்திருந்தார் நானும் இருந்தேன் எனது மகன் ரமேஷ் இருந்தார். வண்டியில் அடிபட்டவர் நடுரோட்டில் இருந்தார். அவரை சாலையின் ஓரமாக நின்ற டாடா ஏஸ் வாகனத்தின் அருகில் அமரவைத்து கேட்ட போது அவர் தன்னை சிலர் இருசக்கர வாகனத்தில் அடித்துவிட்டு சென்று விட்டதாகவும் யார் என்று தெரியவில்லை என்றும் எங்களிடம் கூறினார். அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்த உடன் அவரை ஆம்புலன்சில் வைத்து அனுப்பிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :–**

என்னை விசாரித்த போலீஸ் அதிகாரியின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து ஒரு வருடம் கழித்து என்னை போலீசார் விசாரித்தார்கள், நான் போலீசாரிடம் எனது முதல் விசாரணையில் கூறிய விபரத்தை தான் கூறினேன். நான் பார்த்த போது அவர் நடுரோட்டில் தான் கிடந்தார்.

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி
மானாமதுரை